**முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை:-**திருமதி ஆ.முத்துசாரதா, பி.எல்., பி.ஜி.டி.பி.எம்.,**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்.**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் வியாழக்கிழமை

**இந்திய விவாகரத்து அசல் மனு எண்-99/2025**
CNR. No:-TNDG01-004697-2025

ஜெனிபர், (34/2025)
க/பெ. குழந்தை ஏசு .. மனுதாரர்

// எதிராக //

குழந்தை ஏசு, (35/2025)
த/பெ. சவேரியார் .. எதிர்மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்னர் 07.10.2025 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, 27.03.202 ம் தேதியன்று வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் யூ.குழந்தைராஜ் சதீஷ் மற்றும் ஏ.பெரியசாமி ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டு, சாட்சிகளின் சாட்சியங்கள், குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் யாவற்றையும், பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்த

**உத்தரவு**

மனுதாரர் இம்மனுவினை இந்திய விவாகரத்து சட்டம் 1869 பிரிவு 10(1)(ix)(x)ன்படி தாக்கல் செய்து மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.03.2015 ம் தேதி கொடைக்கானல் மூஞ்சிக்கல் திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் கிறிஸ்தவ முறைப்படி நடந்த திருமணத்தை ரத்து செய்து எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரருக்கு விவாகரத்து உத்தரவு வழங்கக்கோரியும்

மற்றும் இம்மனுவின் செலவுத்தொகை, இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுவின் சுருக்கம்–**

மனுதாரரும் அவரது கணவர் எதிர்மனுதாரரும் 1 வருடமாக காதலித்து பின் கடந்த 04/03/2015ம் தேதி இருவீட்டார் முன்னிலையிலும் உறவினர்கள் முன்னிலையிலும் கொடைக்கானல் மூஞ்சிக்கல் திரு.இருதய ஆண்டவர் ஆலயத்தில் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடைபெற்றது. இருவரது திருமண வாழ்வின் பயனாக அனேகா எவிஷ்னா என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது. அவருக்கு தற்போது 9 வயது. திருமணத்திற்கு பின்னிட்டு சில காலம் மட்டும் சந்தோஷமாக எதிர்மனுதாரர் மனுதாரருடன் குடும்பம் நடத்திவந்ததில் எதிர்மனுதாரருக்கு குடிபழக்கம் இருந்து அதனை மனுதாரர் கண்டித்து பின் இருவரும் தனிக்குடித்தம் வந்து எதிர்மனுதாரர் பிக் அப் வாகனத்தை பால் வண்டியாக வைத்து வேலை செய்து வந்ததில் சில மாதங்களில் மீண்டும் குடித்துவீட்டு எதிர்மனுதாரர் ஒழுங்காக வேலை செய்யாமல் வாகனத்தை விற்றுவிட்டார். இவர்களுக்கு குழந்தை பிறந்தபோதும், அதன் பின்னிட்டும் எதிர்மனுதாரர் மனுதாரரின் பெற்றோர்களையே சார்ந்து வந்ததுடன் மனுதாரருக்கு போட்ட நகைகளையும் அவ்வப்போது பிடுங்கி எதிர்மனுதாரர் அடகு வைத்துவிட்டார். எதிர்மனுதாரர் மனுதாரரைப் பற்றியும் குழந்தையைப் பற்றியும் கவலைப்படாமல் வழக்கம்போல் குடித்துவிட்டு வந்து சண்டை போடுவதை வழக்கமாக கொண்டார். பின்னிட்டு மனுதாரர் எதிர்மனுதாரருக்கு போன் செய்தபொழுதெல்லாம் தொலைபேசி அழைப்பை ஏற்காமலும் மனுதாரருடன் பேசுவதையும் தவிர்த்து வந்தார். இதுகுறித்து ஊர் பெரியோர்கள் மூலம் பேசி எதிர்மனுதாரருடன் வீட்டில் சென்று வாழ்ந்து வந்தநிலையில் அப்போதும் எதிர்மனுதாரர் குடீப்பழக்கத்தை விடாமல் மனுதாரரை அடித்து கொடுமைகள் பல செய்து வந்தார். அத்துடன் வீட்டில் இருந்த பணம் ரூ.1,50,000/–த்தை எதிர்மனுதாரர் திருடிவிட்டார்.

வேறுவழியின்றி மனுதாரர் கொடைக்கனல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன்பிறகு எதிர்மனுதாரர் இனி குடிப்பழக்கத்தை கைவிட்டு மனுதாரருடன் ஒழுங்காக சேர்ந்து வாழ்வதாக பலமுறை உறுதி அளித்ததின் பேரில் காவல் துறையினர் எதிர்மனுதாரர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னிட்டு மீண்டும் 17.07.2021 மற்றும் 19.09.2021 ஆகிய தேதிகளில் எதிர்மனுதாரர் மீண்டும் குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்து கொடுமைபடுத்தி மிகவும் தரக்குறைவான வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

எதிர்மனுதாரர் அக்கடி அவரது பெண் நண்பர் வீட்டிற்கு சென்றுவருவதை வழக்கமாக கொண்டுள்ளார். எனவே மனுதாரர் கடந்த 2022 ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் எதிர்மனுதாரரின் கொடுமைகளை தாங்க முடியாமல் தனியாக அவரது பெண் குழந்தையுடன் மனுதாரரின் தாயார் வீட்டில் வசித்து வருகிறார். எதிர்மனுதாரர் ஒரு கணவனாக தனது மனைவிக்கும் குழந்தைக்கும் செய்யவேண்டிய அடிப்படை கடமையைக்கூட செய்யாமல் மிகவும் கொடுமைப்படுத்தி வருகிறார். இன்நிலையில் மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து தனக்கும் தனது குழந்தைக்கும் நிம்மதி கிடைத்தால் போதுமென்ற எண்ணத்தில் ஊர் பெரியோர்கள் மூலம் பேசி மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து ஒத்திசைவில் விவாகரத்து கோரி நீதிமன்றத்தில் IDOP 68/2023 தாக்கல் செய்ததில் எதிர்மனுதாரர் ஆஜராகாததால் அந்த வழக்கு கடந்த 24.09.2025ம் தேதி தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 2022ம் ஆண்டுமுதல் தற்சமயம் வரை எதிர்மனுதாரர் மனுதாரரையும் குழந்தையையும் பிரிந்து வாழ்ந்து வருவதால் இந்த திருமண உறவை முறித்துகொள்ள விவாகரத்து கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுப்படி உத்தரவாகவேண்டும்.

3) எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டும், எதிருரை தாக்கல் செய்ய பல வாய்தாக்கள் அளிக்கப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யவில்லை மேலும் அழைத்தும் ஆஜராகாததால் இந்நீதிமன்றத்தால் 5.02.2026ம் தேதி ஒருதரப்பு செய்யப்பட்டுள்ளார்.

4) இம்மனுவில் தீர்விற்கான பிரச்சினை யாதெனில் **மனுதாரர் கோரும் விவாகரத்து பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா ?** என்பதேயாகும்.

5) இம்மனுவில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 04/03/2015ம் தேதி இருவீட்டார் முன்னிலையிலும் உறவினர்கள் முன்னிலையிலும் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடைபெற்றதென்றும், இருவரது திருமண வாழ்வின் பயனாக அனேகா எவிஷ்னா என்ற பெண் குழந்தை பிறந்து அவருக்கு தற்போது 9 வயது ஆவதாகவும், திருமணத்திற்கு பின்னிட்டு சில காலம் மட்டும் சந்தோஷமாக எதிர்மனுதாரர் குடும்பம் நடத்திவந்து, பின்னிட்டு எதிர்மனுதாரர் அடிக்கடி குடித்துவிட்டுவந்து மனுதாரரை அடித்தும் தரக்குறைவாக பேசியும் வந்ததுடன், அவர் வீட்டில் இருந்து பணம் ரூ.1,50,000/-த்தை திருடிவிட்டதுடன் மனுதாரரின் நகைகளையும் தனது தேவைக்கு எடுத்துசென்றுவிட்டார் என்றும், எதிர்மனுதாரர் தனது மனைவி மற்றும் குழந்தையை கவனிக்காமல் அவர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளையும் செய்யாமல் வாழ்ந்து-வருவதுடன் பெண் நண்பர் வீட்டிற்கும் அடிக்கடி சென்று வருவதாகவும் இதனால் மனுதாரர் மனதளவில் மிகவும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளார்

என்றும், இதுகுறித்து மனுதாரர் கொடைக்கனல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன்பிறகு எதிர்மனுதாரர் இனி குடிப்பழக்கத்தை கைவிட்டு மனுதாரருடன் ஒழுங்காக சேர்ந்து வாழ்வதாக பலமுறை உறுதி அளித்ததின் பேரில் காவல் துறையினர் எதிர்மனுதாரர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் ஆனால் பின்னிட்டும் மீண்டும் 17.07.2021 மற்றும் 19.09.2021 ஆகிய தேதிகளில் எதிர்மனுதாரர் மீண்டும் குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்து கொடுமைபடுத்தி மிகவும் தரக்குறைவான வார்த்தைகளால் திட்டியுள்ளார் என்றும், எதிர்மனுதாரரின் கொடுமைகளை தாங்க முடியாமல் மனுதாரர் தனியாக அவரது பெண் குழந்தையுடன் மனுதாரரின் தாயார் வீட்டில் வசித்து வருகிறார் என்றும், இன்நிலையில் மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து தனக்கும் தனது குழந்தைக்கும் நிம்மதி கிடைத்தால் போதுமென்ற எண்ணத்தில் ஊர் பெரியோர்கள் மூலம் பேசி மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து ஒத்திசைவில் விவாகரத்து கோரி நீதிமன்றத்தில் IDOP 68/2023 தாக்கல் செய்ததில் எதிர்மனுதாரர் ஆஜராகாததால் அந்த வழக்கு கடந்த 24.09.2025ம் தேதி தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதென்றும், கடந்த 2022ம் ஆண்டுமுதல் தற்சமயம் வரை எதிர்மனுதாரர் மனுதாரரையும் குழந்தையையும் பிரிந்து வாழ்ந்து வருவதால் இந்த திருமண உறவை முறித்துகொள்ள விவாகரத்து கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாக எடுத்துரைத்துள்ளார்.

**7)** மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு மனுவில் கூறிய சங்கதிகளையே தனது முதல் விசாரணை சாட்சியத்திலும் எடுத்துரைத்து மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருண பதிவு சான்றிதழ் அசல் ம.சா.ஆ.3 ஆகவும், திருமண போட்டோ நகல் ம.சா.ஆ.4 ஆகவும், தங்களது குழந்தையின் பிறப்பு சான்றிதழை ம.சா.ஆ 5 ஆகவும், குடும்ப அடையாள அட்டை நகலை ம.சா.ஆ.6 ஆகவும் 24.09.2025 தேதியிட்டு IDOP No.68/2023 வழக்கில் ஏற்பட்ட தள்ளுபடி உத்தரவினை ம.சா.ஆ.7 ஆகவும் தாக்கல் செய்து,

எதிர்மனுதார் எவ்வித காரணமும் இன்றி கடந்த 2022ம் ஆண்டுமுதல் தற்பொழுதுவரை தங்களை பிரிந்து வாழ்ந்து வருவதால், தனது கணவரிட–மிருந்து தனக்கு விவாகரத்து வழக்கி உத்தரவிடக்கோரி சாட்சியமளித்துள்ளார்.

8) மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.03.2015ம் தேதி கொடைக்கானல் மூஞ்சிக்கல் திரு.இருதய ஆண்டவர் ஆலயத்தில் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடைபெற்றது என்பது ஒப்புக்கொள்ளப்படுகின்றது. அந்த திருமண பதிவு சான்று நகல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரரும் எதிர்மனுதாரரும் தங்கள் திருமணத்தைத் தொடர்ந்து கணவன்–மனைவியாக தங்கள் இல்லற வாழ்க்கையை வாழ்ந்து இல்லறத்தின் பயனாய் அன்சா எவிஷ்னா என்ற பெண் குழந்தை ஒன்று பிறந்துள்ளார் என்பதை ம.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் அறியமுடிகிறது. திருமணத்திற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர் தினமும் குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்து கொடுமைகள் எடுத்தி, தரக்குறைவாக பேசி வந்ததாகவும் பின்னிட்டு காவல் துறையினர் மூலம் எதிர்மனுதாரரை மனுதாரருடன் சேர்ந்து வாழும்படி நடவடிக்கை எடுத்ததில் அதற்கு ஒப்புக்கொண்டு சேர்ந்து வாழ்ந்த எதிர்மனுதாரர் பின்னிட்டு தனது மனைவி மக்களை பிரிந்து 2022 முதல் இன்றுவரை தன்னிச்சையாக வாழ்ந்து வருவதாகவும் மனுதாரருடன் சேர்ந்து வாழ முன்வரவில்லை என்றும், இந்நிலையில் இருவரும் சேர்ந்து ஒத்திசைவாக IDOP No.68/2023 வழக்கு தாக்கல் செய்ததில் அதில் எதிர்மனுதாரர் ஆஜராகாததால் கடந்த 24.09.2025 தேதியன்று தள்ளுபடி ஆகிவிட்டதென்றும், மேலும் கடந்த 2022ம் ஆண்டு முதல் பிரிந்து கடந்த 4 ஆண்டுகளாக தனிமைப்படுத்தி விட்டு மனுதாரை மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் தொடர்ந்து கொடுமை செய்து வந்துள்ள நிலையிலும் இனியும் இருவரும் சேர்ந்து வாழ்வதற்கான சூழ்நிலை இருப்பதாக

அறியமுடியவில்லை என மனுதாரர் தனது தரப்பு வழக்கை நிரூபித்துள்ள நிலையில், மனுதாரர் கோரும் விவாகரத்து பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.03.2015 ம் தேதி கொடைக்கானல் மூஞ்சிக்கல் திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் கிறிஸ்தவ முறைப்படி நடந்த திருமணத்தை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு செலவுத்தொகை வழங்கப்படவில்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2026.04.16 17:53:47 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

**இணைப்பு :**
**மனுதாரர் தரப்பு சாட்சி–**

ம.சா.1 ஜெனிபர் (மனுதாரர்)

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் –**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | -- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| ம.சா.ஆ.2 | 26.09.2025 | மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு கொடைக்கானல் மூஞ்சிக்கல் திரு இருதய ஆண்டவர் ஆலய பங்குத் தந்தையால் வழங்கப்பட்ட திருமண சான்றிதழ் நகல். |
| ம.சா.ஆ.3 | 04.03.2015 | மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் தமிழ்நாடு திருமண பதிவுச்சட்டம் 2009 ன்படி வழங்கப்பட்ட திருமண பதிவு சான்றிதழ் நகல். |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.4 | -- | மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் திருமண புகைப்படம் |
| ம.சா.ஆ.5 | 11.11.2015 | மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் பிறந்த குழந்தை அனேகா எவிஸ்னாவின் பிறப்புசான்றிதழ் நகல். |
| ம.சா.ஆ.6 | -- | குடும்ப அட்டை நகல். |
| ம.சா.ஆ.7 | 24.09.2025 | தேதிட்டு IDOP No.68/2023 ல் பிறப்பிக்கப்பட்ட தள்ளுபடி உத்தரவின் E-Court Diary நகல். |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** : இல்லை.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.04.16 17:53:51 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்
IDOP No- **99/2025**
நாள்-16.04.2026
அசல்/நகல் உத்தரவு